நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : தொடக்கநிலை

## Level : Basic

***June 2012***

வினாக்கள் : 30

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

ஆசிரியரின் கவனத்திற்கு :

- மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும். (ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**For questions 1 to 8, choose the word(s) that best describe the action shown in the picture.**

**1 முதல் 8 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லைத் (சொற்களைத்) தெரிவு செய்க.**



1. சிறுவர்கள் ______________________

   (a) சாப்பிடுகிறார்கள்.

   (b) படிக்கிறார்கள்.

   (c) தூங்குகிறார்கள்.

   (d) விளையாடுகிறார்கள்.



2. இப்படத்தில் ______________________

   (a) குதிரைகள் ஓடுகின்றன.

   (b) குரங்குகள் தாவுகின்றன.

   (c) மாடுகள் புல் மேய்கின்றன.

   (d) மான்கள் கூடி இருக்கின்றன.



3. இப்படம் ஒரு ___________ குறிக்கிறது.

   (a) பிறந்த நாள் விழாவைக்

   (b) திருமண விழாவைக்

   (c) விளையாட்டு விழாவைக்

   (d) கலை விழாவைக்




4. சிறுமி பேருந்தில் ____________________

(a) இறங்குகிறாள்.

(b) ஏறுகிறாள்.

(c) இருக்கிறாள்.

(d) நிற்கிறாள்.



5. அப்பா சமையலறையில் ________________

(a) சமைக்கிறார்.

(b) குடிக்கிறார்.

(c) குளிக்கிறார்.

(d) தூங்குகிறார்.




6. சிறுவர்கள்__________விளையாடுகிறார்கள்.

(a) கால்பந்து

(b) கைப்பந்து

(c) வலைப்பந்து

(d) கூடைப்பந்து



7. மாணவர்கள் மிருகக்காட்சிச்சாலையில் __________ வேடிக்கை பார்க்கிறார்கள்.

(a) சிங்கத்தை

(b) புலியை

(c) குரங்கை

(d) கரடியை

| | |
|---|---|
|  | 8. அக்காவும் ____________ பாடசாலைக்குப் போகிறார்கள்.<br>(a) அப்பாவும்<br>(b) அம்மாவும்<br>(c) தங்கையும்<br>(d) அண்ணனும் |

## Read and understand the given Poem and answer the questions 9 to 11.

**கீழ் தரப்பட்ட பாடலை வாசித்து வினா 9 இலிருந்து 11 வரையுள்ள வினாக்களுக்கு பதில் அளிக்கவும்.**



**எங்கள் வீட்டு நாய்க்குட்டி**
**நன்றி உள்ள நாய்க்குட்டி**
**வெள்ளைநிற நாய்க்குட்டி**
**துள்ளி ஓடும் நாய்க்குட்டி**
**குட்டிப் பாப்பா தன்னோடு**
**குதித்து ஆடும் நாய்க்குட்டி**
**கண்ணைப் போல வீட்டையே**
**காவல் காக்கும் நாய்க்குட்டி**

9. இந்தப் பாடலுக்கு மிகவும் பொருத்தமான தலைப்பு என்ன?

(a) குட்டிப்பையன்
(b) நாய்க்குட்டி
(c) குட்டிப் பாப்பா
(d) எங்கள் வீடு

10. நாய்க்குட்டி என்ன நிறம் எனப் பாடல் சொல்கிறது?

(a) சிவப்பு நிறம்
(b) கறுப்பு நிறம்
(c) வெள்ளை நிறம்
(d) மஞ்சள் நிறம்

11. கண்ணைப் போல நாய்க்குட்டி எதைக்காக்கும்?

(a) வீட்டை
(b) குட்டிப் பாப்பாவை
(c) கண்ணை
(d) அம்மா அப்பாவை

**Read the story and answer the questions 12 to 16 from the information given.**

**கீழ் தரப்பட்ட கதையை வாசித்து அதில் தரப்பட்ட தகவல்களைக் கொண்டு 12 இலிருந்து 16 வரையுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி ஆகியோரின் கதையைக் கூறுகின்றது. இதனை இளங்கோ அடிகள் எழுதினார். கோவலன் கண்ணகியின் சிலம்பை விற்கவென மதுரைக்கு எடுத்துச் சென்றான். மதுரையில் அவனை அரசியின் சிலம்பைத் திருடியவன் எனக் குற்றஞ் சாட்டினார்கள். குற்றம் சாட்டப்பட்ட கோவலன் அரசனின் ஆணைப்படி காவலர்களால் கொல்லப்பட்டான். அதை அறிந்த கண்ணகி அரசனிடம் சென்று தன் கணவன் கள்வன் அல்ல என நிரூபித்தாள். அவளின் கோபத்தால் பாண்டிய மன்னன் இறந்தான். பின் கண்ணகி மதுரை நகரையே எரித்தாள். இதுதான் சிலப்பதிகாரத்தின் கதைச்சுருக்கம்.

12. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

(a) பாண்டிய மன்னன்
(b) இளங்கோ அடிகள்
(c) கோவலன்
(d) கள்வன்

13. கோவலன் மதுரையில் விற்கவென எடுத்துச்சென்ற சிலம்பு யாருடையது?

(a) அரசியின் சிலம்பு
(b) கள்வனின் சிலம்பு
(c) கண்ணகியின் சிலம்பு
(d) பாண்டிய மன்னனின் சிலம்பு

14. சிலப்பதிகாரம் யாருடைய கதையைக் கூறகிறது?

(a) கோவலன், கண்ணகி
(b) பாண்டிய மன்னன், அரசி
(c) கள்வன், காவலர்கள்
(d) வாணி, கண்ணன்

15. கண்ணகி எதை எரித்தாள்?

(a) நாட்டை
(b) வீட்டை
(c) இலங்கைத் தீவை
(d) மதுரை நகரை

16. கண்ணகியின் கோபத்தால் இறந்தவன் யார்?

(a) கோவலன்
(b) பாண்டிய மன்னன்
(c) காவலன்
(d) கள்வன்

## For questions 17 to 18 choose the word that has the closest meaning to the underlined word.
**17 முதல் 18 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

17. வாணி தன் தோழி ராணியைப் பார்த்துப் <u>புன்னகைத்தாள்</u>.

(a) அழுதாள்
(b) துள்ளினாள்
(c) சிரித்தாள்
(d) படித்தாள்

18. தமிழ் பாடசாலையில் ஆசிரியர் எமக்குத் தமிழ் <u>படிப்பித்தார்</u>.

(a) பாடக் காண்பித்தார்
(b) கற்றுக் கொடுத்தார்
(c) ஆடிக் காண்பித்தார்
(d) விளையாட்டுக் காட்டினார்

## For questions 19 to 21 give the opposites to the underlined words.
**19 முதல் 21 வரையுள்ள வினாக்களில் அடிக்கோடிட்ட சொல்லிற்கு எதிர்க் கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

19. புலி மிகவும் <u>வேகமாக</u> ஓடும் மிருகம்.

(a) கெதியாக
(b) மெதுவாக
(c) விரைவாக
(d) துரிதமாக

20. எல்லோருக்கும் நீ <u>நன்மை</u> செய்.

(a) ஏழ்மை
(b) தீமை
(c) உண்மை
(d) வாய்மை

21. கண்ணன் தமிழ் பேச்சுப்போட்டியில் <u>விருப்பமுடன்</u> பங்குபற்றினான்.

(a) ஆசையுடன்
(b) போட்டியுடன்
(c) கோபத்துடன்
(d) வெறுப்புடன்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**For questions 22 to 26 choose the best answer to complete the sentence.**
**22 முதல் 26 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொல்லைக் கொண்டு வசனத்தைப் பூர்த்தி செய்க.**

22. நேற்று கண்ணனும் அமலனும் பூங்காவில் ______________________________.

(a) விளையாடுவார்கள்
(b) விளையாடினார்கள்
(c) விளையாடுகிறார்கள்
(d) விளையாடினான்

23. இப்பொழுது மேடையில் மங்கையின் நடன நிகழ்ச்சி ____________________.

(a) நடக்கிறது
(b) கேட்கிறது
(c) ஒலிக்கிறது
(d) ஆடுகிறது

24. நாம் பொங்கல் பண்டிகையை _________________மாதத்தில் கொண்டாடுவோம்.

(a) மாசி
(b) தை
(c) புரட்டாசி
(d) ஆவணி

25. நீயும் நானும் ____________________ போவோமா?

(a) படசலைக்கு
(b) படசழைக்கு
(c) பாடசாலைக்கு
(d) பாடசாளைக்கு

26. நான் ____________________ சாப்பிட்டேன்.

(a) வாலைப்பலம்
(b) வாலைப்பளம்
(c) வாளைப்பளம்
(d) வாழைப்பழம்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**For questions 27 and 28 choose the word that is spelt incorrectly in the given sentence.**
**27 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் எழுத்துப்பிழையான சொல்லை தெரிவு செய்க.**

27. என் வீட்டில் பல நிறங்களில் புக்கள் உள்ளன.

(a) வீட்டில்
(b) நிறங்களில்
(c) புக்கள்
(d) உள்ளன

28. நேற்று எனது தங்கை என்னுடன் விழையாடினாள்.

(a) விழையாடினாள்
(b) என்னுடன்
(c) நேற்று
(d) தங்கை

29. **Arrange these sentences in the most appropriate order.**
**சரியான ஒழுங்கில் வரிசைப்படுத்துக.**

1. நாங்கள் தமிழ் பள்ளிக்கு நடந்து போனோம்.
2. நான் தமிழ் புத்தகங்களைப் புத்தகப் பையில் எடுத்து வைத்தேன்.
3. தமிழ் வகுப்பு இடைவேளையின்போது நண்பர்களுடன் விளையாடினேன்.
4. அம்மா தமிழ் வகுப்புக்குப் போக ஆயத்தமாகும்படி கூறினார்.

(a) 1 2 3 4
(b) 4 2 1 3
(c) 1 3 4 2
(d) 4 3 2 1

30. **Which days students go to school.**
**மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வாரநாட்கள்.**

(a) திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
(b) சனி, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
(c) சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன்
(d) ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி

இதுவே இறுதிப் பக்கம்.